**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**<u>சுருக்கமுறை விசாரணை வழக்கு எண் 453/2024</u>**

**<u>CNR NO.TNTU09-001164-2024</u>**

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம். குற்ற எண். 554/2023 |
| 2. | எதிரி | ஹரிஷ்பாபு த/பெ. வெங்கடேசன் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 279, 338. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 15.12.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 16.12.2023 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | Station Bail<br>22.12.2023 – 22.12.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 17.10.2024 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 11.12.2024 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.19.09.2025 குவிமுச.பிரிவு 311–ன் கீழ் 3141/2025. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1–அ.சா.5 –04.07.2025 18.11.2025<br>அ.சா.6, அ.சா.7–18.08.2025<br>அ.சா.8–26.02.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 05.03.2026 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை | – |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 13.03.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.

எதிரி : ஹரிஷ்பாபு த/பெ. வெங்கடேசன்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 279, 338.

முடிவு : இறுதியாக அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை / கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஹரிஷ்பாபு | வெங்கடேசன் | இந்து | மெக்கானிக் | அமலிங்கபுரம், நெல்லூர், ஆந்திராபிரதேஷ் | 35 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக் கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணை யின் தொடக்கம் | விசார ணையின் முடிவு | உத்தரவு | |
| 15.12.23 | 16.12.23 | 22.12.23 | 22.12.23 | 11.12.24 | 26.02.26 | 13.03.26 | – |

இவ்வழக்கானது 17.10.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 26.02.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.S.ராகவன், B.E., BL.(Hon's), அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின்

சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**தீர்ப்புரை**

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கடந்த 15.12.2023ம் தேதி மாலை சுமார் 18.30 மணிக்கு சென்னை–வெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் நெக்குந்தி மாருதி சோரூம் எதிரில் இவ்வழக்கின் புகார்சாட்சி இளவரசி என்பவரின் கணவர் சாட்சி சேகர் என்பவர் சம்பவயிடத்தில் ரோட்டைக் கடக்கும்போது கிருஷ்ணகிரி பக்கமிருந்து வந்த AP 05 CG 2358 பதிவெண் கொண்ட INNOVA காரின் ஓட்டுநனாரன எதிரி ஹரிஷ்பாபு என்பவர் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து நடந்து சென்ற சாட்சி சேகர் என்பவர் மீது மோதி விபத்து ஏற்டுத்தியதாகவும், சேகருக்கு இடது வலது முன்னங்கால்களில் உள்காயமும், தாடையில் உள்காயத்தை ஏற்படுத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 338–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திரம் வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 279, 338–ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு..ச 207–ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும், எதிரி மீதான குற்ற செயல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த

காரணத்தினால், எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338–ன் கீழான குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

5(i) அ.சா.1 இளவரசி இவ்வழக்கில் புகார்தாரர் ஆவார். அ.சா.1 இளவரசி கடந்த 15.12.2023ம் தேதி மாலை 06.30 மணிக்கு வாணியம்பாடி தாண்டி நெற்குந்தி அருகே கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் அ.சா.1 கணவர் அ.சா.2 சேகர் நடந்து சென்றபோது கிருஷ்ணகிரியிலிருந்து வந்த கார் அ.சா.2 ரோட்டை தாண்டி செல்லும்போது அவர் மீது இடித்து விட்டு சென்றதால், அவரை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்துள்ளார். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் அடிப்படையில் திரு.மஞ்சுநாதன், உதவி ஆய்வாளர் சிகிச்சையில் இருந்த அ.சா.2 மயக்க நிலையில் இந்ததால் அவரது மனைவி அ.சா.1 இளவரசி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூத்தை பெற்றுள்ளார்.

5 (ii) திரு.மஞ்சுநாதன், உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப நிலைய குற்ற எண் 554/2023 இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் அதே நாள் 14.00 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.6 அருண்குமார், அ.சா.7 நாகநாதன் என்பவர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5 (iii) பின்னர் சாட்சிகள் அ.சா.1 இளவரசி அ.சா.2 சேகர், அ.சா.3 கிங்ஸ்லி, அ.சா.4 அருள்தாஸ், அ.சா.5 ரமேஷ்பாபு மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் மோட்டார் வாகனத்தை ஆய்வு செய்த வெங்கட்ராகவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய AP 05 CG 2358 என்ற இருசக்கர வாகனத்தின் அ.சா.ஆ.5 வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். எதிரி ஹரிஷ்பாபு என்பவரை 22.12.2023ம் தேதி 11.00 மணிக்கு ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார்.

5 (iv) பின்னர் காயம்பட்ட சாட்சி சேகருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. நதீம் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 காயச்சான்றிதழை பெற்றுள்ளார். காயச்சான்றிதழின் அடிப்படையில் இவ்வழக்கை இ.த.ச. பிரிவுகள் 279, 337 கீழிலிருந்து 279, 338-என கீழ் அ.சா.ஆ.7 பிரிவு மாறுதல் அறிக்கையை தயார் செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338-ன் கீழ் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)-ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.</u>**

7. அரசு தரப்பு வழக்கானது கடந்த 15.12.2023ம் தேதி மாலை சுமார் 18.30 மணிக்கு சென்னை–வெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் நெக்குந்தி மாருதி சோரூம் எதிரில் இவ்வழக்கின் அ.சா.1 என்பவரின் கணவர் அ.சா.2 சேகர் என்பவர் சம்பவயிடத்தில் ரோட்டைக் கடக்கும்போது கிருஷ்ணகிரி பக்கமிருந்து வந்த AP 05 CG 2358 பதிவெண் கொண்ட INNOVA காரின் ஓட்டுநனாரன எதிரி ஹரிஷ்பாபு என்பவர் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து நடந்து சென்ற அ.சா.2ன் மீது மோதி விபத்து ஏற்டுத்தியதாகவும், சேகருக்கு இடது வலது முன்னங்கால்களில் உள்காயமும், தாடையில் உள்காயத்தை ஏற்படுத்தி கொடுங்காயத்த உண்டாக்கியதாக எதிரி மீது அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கில் காயமுற்ற அ.சா.2 சேகர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்றும், விபத்தை பார்த்த கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், அரசு தரப்பில் எதிரி காரை அதிவேகமாக ஓட்டி வந்து சேகருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக நிரூபிக்கவில்லையென்றும், அரசு தரப்பில் எதிரியின் அஜாக்கிரதையால், கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதனை தகுந்த சாட்சிகளின் மூலம் நிரூபிக்கவில்லையென்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

9. அரசு தரப்பில் காயமுற்ற அ.சா.2 சேகர் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. நதீம் அகமது கொடுத்த அ.சா.ஆ.6 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், அ.சா.2 சேகருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது புலனாகிறது. மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.5ஐ பரிசீலனை செய்கையில், விபத்தானது வாகனத்தின் எவ்வித இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. இச்சூழ்நிலையில் விபத்தானது யாருடைய கவனக்குறைவு அல்லது தகாத துணிச்சலால் விபத்து ஏற்பட்டு அ.சா.2 க்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

10. இவ்வழக்கின் புகார் சாட்சியான இளவரசி அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 15.12.2023ம் தேதி மாலை 06.30 மணிக்கு வாணியம்பாடி தாண்டி நெற்குந்தி அருகே கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் என் கணவர் சேகர் நடந்து சென்றபோது கிருஷ்ணகிரியிலிருந்து வந்த கார் என் கணவர் ரோட்டை தாண்டி செல்லும்போது என் கணவரின் மீது இடித்து விட்டு சென்றுவிட்டது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக சம்பவ இடத்திற்கு எதிரே மெக்கானிக் கடை வைத்திருந்த கிங்ஸ்லி என்பவர் எனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்து என் கணவரை வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் பார்க்கும்போது என் கணவருக்கு 2 கால்களும் அடிப்பட்டிருந்தது. அவரது கால் உள்ளே 8 துண்டாக அடிப்பட்டிருந்தது. முகவாய் கட்டையிலும் அடிப்பட்டிருந்தது. போலிசார் வந்தபோது எனது கணவர் மயக்க நிலையில் இருந்ததால் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது, **என் கணவருக்கு ஏற்பட்ட விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும், நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது** என்றும், என் கணவருக்கு ஏற்பட்ட விபத்துக்காக இழுப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் அந்த இழப்பீட்டை பெற வேண்டும் என்பதற்காக தான் என்றும், போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. " என அவரது முதன்மை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

11. இவ்வழக்கின் காயமுற்ற சாட்சியான சேகர் அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2023ம் வருடத்தில் 15ம் தேதி என்று நினைக்கிறேன், மாலை நேரத்தில் வாணியம்பாடி

டோல்கேட் அருகே நான் ரோட்டை தாண்டி நடந்து சென்றபோது எங்கிருந்தோ வந்த ஒரு கார் என் மீது மோதியது. அதன் பின்னிட்டு என்ன நிகழ்ந்தது என்று எனக்கு தெரியாது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, விபத்து நடந்த இடத்திற்கு ஒரு பத்து மீட்டர் தொலைவில் ஒரு சுங்கசாவடி உள்ளது, **அதனால் வாகனங்கள் வேகமாக வர வாய்ப்பில்லை என்றும், விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண், அதை ஓட்டி வந்த நபர் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றும்,** விபத்து நடந்த இடத்தில் பாதையை கடப்பதற்கான வழியோ வாகனங்கள் வாளைவதற்கு வளைவோ இல்லை என்றும், **சென்டர் மீடியேசனில் இருந்து நான் திடீரென இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். "** என சாட்சியம் அளித்துள்ளார்.

12. கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கிங்ஸ்லி தனது சாட்சியத்தின்போது, " ஒரு பெரியவர் ரோட்டை கடந்து வரும்போது கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை நோக்கி வந்த Anthra Pradesh Innova கார் ஒன்று Over Speedஆகவும், Rash Drivingஆகவும் வந்து பெரியவர் மீது மோதியது. மோதியதில் பெரியவர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். அதில் அவர் கால்கள் இரண்டும் உடைந்தது. மேற்படி காரை ஓட்டி வந்த நபரின் பெயர் தெரியவில்லை. அவருக்கு லேசாக சொட்டை தலையாக இருந்தது. அவர் ஆந்திராவை சேர்ந்தவர். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றும், விபத்து ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார்கள், அதன் பதிவெண் எனக்கு தெரியது என்றால் சரியல்ல என்றும், நான் எனது முதன்மை விசாரணையில் வாகனத்தின் பதிவெண், காரை ஓட்டி வந்த நபர் பெயர் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றும், **போலிசார் என்னிடம் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை** என்றும், **விபத்தானது சேகரின் அஜாக்கிரதையாலும் அவர் திடீரென இறங்கியதால் தான் ஏற்பட்டது. "** என அவரது முதன்மை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

13. கேள்வியுற்ற சாட்சியான அ.சா.4 அருள்தாஸ் தனது சாட்சியத்தின்போது, " சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு 15ம் தேதி 2வது மாதத்தில் மாலை நேரத்தில் வாணியம்பாடி நெற்குந்தி அருகே அ.சா.2 சேகர் நடந்து ரோட்டைதாண்டும்போது கார் மோதி விபத்து ஏற்பட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் கேள்விப்பட்டேன். தகவல் தெரிந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். சேகருக்கு இரு கால்கள் மற்றும் முகத்தாடையில் அடிப்பட்டிருந்தது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரித்து தனியாக ஏதும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கு விவரம் ஏதும் தெரியாது. " என சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் மற்றொரு கேள்வியுற்ற சாட்சியான அ.சா.5 ரமேஷ்பாபு தனது சாட்சியத்தின்போது, " 15.12.2023ம் தேதி மாலை 07.00 மணியளவில் அ.சா.1 இளவரசி எனக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு அ.சா.2 சேகர் வாணியம்பாடி நெற்குந்தி டோல்கேட் அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கி மெக்கானிக்கை பார்க்க நடந்து சென்றபோது ஆந்திரா இன்னோவா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். சேகருக்கு வலது காலின் 3 பகுதிகளில் பலத்த அடிப்பட்டு மிகுந்த ரத்த சேதம் ஏற்பட்டிருந்தது. இடது காலில் 3 இடங்களில் அடிப்பட்டிருந்தது. முகத்தாடையில் அடிப்பட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரித்து தனியாக ஏதும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கு விவரம் ஏதும் தெரியாது என்றால் சரிதான். " என முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.6 அருண்குமார் தனது சாட்சியத்தில், " கடந்த 16.12.2023ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் கோவிலுக்கு சென்றுவிட்டு

புத்துக்கோவில் டோல் கேட் தாண்டி வந்துக்கொண்டிருந்த போது மாருதி ஷோரூம் எதிரே ஏற்கனவே விபத்து நடந்த இடத்தில் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து ரிபோர்ட் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு முதல் நாள் மாலை அந்த இடத்தில் சாலை விபத்து நடந்தது என்றும், எதிரில் மாருதி ஷோரூம் உள்ளது என்று குறித்துக்கொண்டு தயாரித்த ஆவணத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, வழக்கு விவரம் ஏதும் தெரியாது என்றும், **முதன்மை சாட்சியத்தில் சொன்ன விவரங்கள் போலிசார் சொல்லியதன் பேரில் தான் தெரியும்** என முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

16. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 நாகநாதன் தனது சாட்சியத்தில், " கடந்த 16.12.2023ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் கோவிலுக்கு சென்றுவிட்டு புத்துக்கோவில் டோல் கேட் தாண்டி வந்துக்கொண்டிருந்த போது மாருதி ஷோரூம் எதிரே ஏற்கனவே விபத்து நடந்த இடத்தில் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து ரிபோர்ட் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு முதல் நாள் மாலை அந்த இடத்தில் சாலை விபத்து நடந்தது என்றும் எதிரில் மாருதி ஷோரூம் உள்ளது என்று குறித்துக்கொண்டும் தயாரித்த ஆவணத்தில் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, போலிசார் பூர்த்தி செய்யாத வெள்ளை தாளில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும், வழக்கு விவரம் ஏதும் தெரியாது. " என முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.8 மஞ்சுநாதன், உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், அ.சா.1யிடம் புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதற்கேற்ப அ.சா.ஆ3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயாரித்து அனைத்து சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும், பின்பு திரு. வெங்கட்ராகவன், மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாகன

ஆய்வறிக்கை அ.சா.ஆ.5ஐ பெற்றதை குறித்தும், அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. நதீம் அகமது என்பவரை விசாரித்து அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்று, புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

18. அ.சா.8ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், சட்டப்படி தங்களது கடமையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட தனி நபர் சாட்சிகள் எதிரி மீது குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் எதிரியுடைய கவனக்குறைவு அல்லது தகாத துணிச்சலால் விபத்து ஏற்பட்டது என சாட்சியம் அளிக்காத நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. அரசு தரப்பில் அ.சா.1 இளவரசியின் கணவர் அ.சா.2 சேகர் சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் நெக்குந்தி மாருதி ஷோரூம் எதிரில் ரோட்டைக் கடக்கும்போது எதிரி நான்கு சக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து அ.சா.2ன் மீது மோதி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக இ.த.ச பிரிவு 279, 338 ன்கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 இளவரசி அவரது சாட்சியத்தில் **நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால்** இவ்வழக்கின் மூல ஆதாரமான அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலமே சந்தேகத்திற்குள்ளாகுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.1 அவரது சாட்சியத்தில் **என் கணவருக்கு ஏற்பட்ட விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதாலும்,** காயமுற்ற சாட்சியான அ.சா.2 சேகர் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் **விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண், அதை ஓட்டி வந்த நபர் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றும், சென்டர் மீடியேசனில் இருந்து அவர் திடீரென இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது** என சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கிங்ஸ்லி அவரது

சாட்சியத்தில் விபத்தானது சேகரின் அஜாக்கிரதையாலும் அவர் திடீரென இறங்கியதால் தான் ஏற்பட்டது என சாட்சியம் அளித்துள்ளதாலும், கேள்வியுற்ற சாட்சிகளான அ.சா.4 அருள்தாஸ் மற்றும் அ.சா.5 ரமேஷ்பாபு அவர்களது சாட்சியத்தில் விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், வழக்கு விவரம் ஏதும் தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.6 அருண்குமார் அவரது சாட்சியத்தில் வழக்கு விவரம் ஏதும் தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 நாகநாதன் அவரது சாட்சியத்தில் போலிசார் பூர்த்தி செய்யாத வெள்ளை தாளில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள், வழக்கு விவரம் ஏதும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் மூலம் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டு அ.சா.2 சேகருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்ற எதிரி மீதான குற்றச்சாட்டினை சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யவில்லை. எனவே, புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டை தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுவதாலும், சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து, அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 –ன் கீழான சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சணைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

20. <u>**முடிவாக**</u> இவ்வழக்கில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 279, 338–ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

21. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரி கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி.இளவரசி |
| 2 | அ.சா.2 | திரு.சேகர் |
| 3 | அ.சா.3 | திரு.கிங்ஸ்லி |
| 4 | அ.சா.4 | திரு.அருள்தாஸ் |
| 5 | அ.சா.5 | திரு.ரமேஷ்பாபு |
| 6 | அ.சா.6 | திரு.அருண்குமார் |
| 7 | அ.சா.7 | திரு.நாகநாதன் |
| 8 | அ.சா.8 | திரு.மஞ்சுநாதன், உதவி ஆய்வாளர். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 16.12.2023ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம் |
| 2 | அ.சா.ஆ.2 | 16.12.2023ஆம் தேதியிட்ட பார்வை மகசர் |
| 3 | அ.சா.ஆ.3 | 16.12.2023ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | 16.12.2023ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |

| | | |
|---|---|---|
| 5 | அ.சா.ஆ.5 | 22.12.2023ஆம் தேதியிட்ட வாகனத்தின் ஆய்வறிக்கை |
| 6 | அ.சா.ஆ.6 | 08.01.2024ஆம் தேதியிட்ட சேகரின் காயச்சான்று |
| 7 | அ.சா.ஆ.7 | 05.02.2024ஆம் தேதியிட்ட பரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.